**துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2020**

துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3716 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரை II இன் பிரிவு 2.09 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய ஒருங்கினைவு என்பவற்றில் சாதகமான விளைவினை வைத்திருத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளகும். கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குவதனை வகுத்தல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமன நிலையத்திற்கான போக்குவரத்து நேரத்தினைகுறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து ஏனைய பிராந்தியங்களிற்கான லாஜிஸ்டிக் போக்குவரத்தின் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன சிந்திக்கப்பட்ட நன்மைகளாகும். கொழும்பு புரநகரங்களிலுள்ள போக்குவரத்து நெரிசல் கூட கொழும்பு நெடுஞ்சலையில் கொள்களன்களின் நகர்வில் குறைவினை எதிர்பார்ப்பதனூடாக எளிதாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 56,815.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 47,346 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 9,469.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் ஜிஓஎஸ்எல் இனால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. 2016 பெப்ரவரியில் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் 2016 மார்ச் இல் பெறப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2025 ஜுன் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 1,463.39 மில்லியன் தொகையான செய்து முடிக்கப்பட்ட வேலைகளின் மொத்த பெறுமதியுடன் தொடர்புபட்ட ரூபா 146.34 மில்லியன் தொகையான பிடிகாசு செயற்திட்டத்தினால் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, நடைமுறை வேலை கணக்கு மற்றும் பிடிகாசு கணக்கு என்பன அப் பெறுமதியினால் குறைத்துக்காட்டப்படிருந்தது. | 146.34 | கணக்காய்வு கருத்துரை சரியாகும். 2021 ஏப்ரல் மாதத்தில் பிழையினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கைகளை சரியாக பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மத்தியவங்கியின் விசேட (டொலர்) கணக்கிலிருந்து உருவான ரூபா 2.71 மில்லியன் தொகையான மீள்மதிப்பீட்டு மிகை அவைகளை செயற்திட்டத்தின் தேரிய சொத்துக்களின் கீழ் காட்டாமல் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் மொத்த கிரயம் அப்பெறுமதியினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2.71 | கணக்காய்வு கருத்துரை உண்மையிலே தவறாகும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இனை பின்பற்றல் வேண்டும். |

### 3 பௌதீக செயலாற்றல்

#### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| விடயங்கள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| (அ) துறைமுக நுழைவினை மேன்மையுறச் செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் நிர்மான வேலைகள். | 53% | 23% | நிர்மான வேலைகளின் செயலாற்றல் இலக்குகளிற்கு பின்னாக காணப்பட்டது. | ஒப்பந்தகாரரின் மந்நகதியான செயலாற்றல் |
| (ஆ) ரூபா 10,382 தொகையான 8 நடவடிக்கைகள் பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2020 இல் சனவரியிலிருந்து ஜூன் இல் தொடங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பூச்சியம். | செயற்திட்டத்துடன் தொடர்புபட்ட 8 நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தாமதமாக காணப்பட்டது. | குறிப்பிடப்படவில்லை. |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** ஒப்பந்ததாரர்களின் மந்தகதியான செயலாற்றல் செயற்திட்டதின் செயற்பாட்டை குறைக்க காரணமாக அமையும்.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்** இலக்கிடப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்ய நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

#### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த திட்டம், செயல்திட்டம், பெறுகைத்திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை ஏனையவற்றுடன் பொறுந்தாததுடன் செயற்திட்டத்தின் குறிக்கோல்களுடன் வரிசைப்படுத்தப்பட்டது. | கவனத்தில் கொள்ளப்படுள்ளதுடன் தேவையான திருத்தங்களுடன் முன்னெடுக்கப்படுகின்றது. | செயற்திட்டத்தின் செயலாற்றல் திட்டம், பெறுகைத்திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி உரிய காலத்தில் செயற்திட்ட இலக்குகளை அடைய பயன்படுத்தப்படலும் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 5,858 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வெளிநாட்டு கடனின் பயன்படுத்தலிற்காக 2020 இல் பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மொத்த ஒதுக்கீட்டில், ஒதுக்கீட்டில் 73 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 4,302 மில்லியனான ஒரு தொகை ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் வேலைகள் காரணமாக செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரையுடன் உடன்பட்டனர். ஒப்பந்ததாரின் மந்தகதியான செயலாற்றல் செயற்திட்டத்தின் செயலாற்றலை குறைக்க வழிவகுக்கும். | காலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடன் வசதிகளினையும் பயன்படுத்த நிதித்திட்டத்திற்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தும், அமுல்படுத்தல் முகவர் ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசகர்களிற்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மீதான உள்நாட்டு வரிகளிற்கு உரிய காலத்திற்குள் வரிவலக்கு பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பெறுபேறாக, ரூபா 332.48 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி 2020 ஆம் ஆண்டின் போது 29 மே மற்றும் 26 ஓகஸ்ட் இல் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | நாங்கள் வீஎடி (VAT) கொடுப்பனவை நிராகரித்திருந்தும், அவர்கள் வீஎடி (VAT) இனை செலுத்த பொறுப்புடையவர்களாக இருந்ததனால் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு ஏற்கனவே அவர்கள் பணம் அனுப்பியிருந்ததனை ஒப்பந்ததாரர்கள் உறுதிப்படுத்தினர். | உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திடமிருந்து உள்நாட்டு வரிகளிற்கான ஆரம்ப விலக்களிப்பினை பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்

| வெற்றிடங்கள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள |
|---|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்டவை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவறு உண்மை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
| பிரதிசெயற்திட்ட பணிப்பாளர் | 01 | - | 01 | திட்டத்தில் 30 ஆளனியினர்கள் அடையளப்படுத்தப் பட்டிருந்தும், பெறுகையில் தாமதம் காரணமாக, அனைத்து உத்தியோகத்தர் நிலைகளும் 2020 இல் தேவையில்லை. | நடவடிக்கைகளை உரிய நேரத்தில் தாமதமின்றி செய்யவும் இலக்கிடப்பட்ட திகதிகளில் செயற்திட்ட வேலைகளை பூர்த்திசெய்யவும் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| பிரதம பொறியியலாளர் | 02 | - | 02 | | |
| செயற்திட்ட பொறியியலாளர் (IT) | 01 | - | 01 | | |
| செயற்திட்ட பொறியிலாளர் (கட்டமைப்பு/கட்டுமானம்) | 01 | - | 01 | | |
| பெறுகை நிபுனர் | 01 | - | 01 | | |
| செயற்திட்ட செயலாளர் | 01 | - | 01 | | |
| நிதி உதவியாளர் | | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | | | | | |
| ஓட்டுனர்கள் | 04 | 01 | 03 | | |
| காரியாலய உதவியாளர் | 03 | 01 | 02 | | |
| சுற்றுச்சூழல்/சமூக | 02 | - | 02 | | |
| உத்தியோகத்தர் | 01 | - | 01 | | |